# பேராசிரியர் உவைஸின் இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஆய்வுத்திறன்

திருமதி. ராஹிலா ஷியாட்

இலக்கியத்தை நுகர்வோருக்கும் நுகர்ந்து ஆய்வு மேற்கொள்வோருக்கும் இலக்கிய மரபு பற்றிய அறிவு இன்றியமையாதது. உலகத்தில் பல்வேறு மொழிகளில் தோன்றியுள்ள இலக்கியங்களில் வழிவழியாக சில பாகுபாடுகளும் இவை தொடர்பான மரபுகளும் பின்பற்றப்பட்டு வருவன போல், தமிழ் மொழியிலுள்ள இலக்கியங்களிலும் மரபு மரபாக சில பாகுபாடுகள் பின்பற்றப்பட்டு வருகின்றன. இந்தவகையில் இலக்கியமானது கவிதை, காவியம், இதிகாசம், நாடகம், வரலாறு, வீரதீர வரலாறு, நவீனம், அற்புதக் கதைகள், சிறுகதைகள் முதலான பல பாகுபாடுகளோடு பல சுவைகளையுடையனவாக வளர்ந்து வருகின்றன.

> "இத்தகைய இலக்கிய வளர்ச்சியோடு அதன் உடன்விளைவாகத் திறனாய்வுத் துறையின் வளர்ச்சியும் பின்னிப் பிணைந்து வந்துள்ளது. திறனாய்வு என்பது, வெறுமனே இலக்கியப் படைப்புக்களை மதிப்பிடுவது மாத்திரமன்று இலக்கியத்தை சுவைஞர் முன்னிலையில் தகுந்த முறையில் அறிமுகம் செய்து வைப்பதும், அதற்கு சமுதாயத்தில் ஓர் அந்தஸ்தை ஏற்படுத்திக் கொடுப்பதும், படைப்பாளி, சுவைஞர் ஆகியோரின் அறிவு நிலை சுவைத்திறன் முதலானவற்றை உயர்த்துவதும் ஒரு படைப்பு பற்றிய பொதுமக்கள் கருத்தை உருவாக்குவதும் இலக்கிய வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைவதும் திறனாய்வாளனின் கடமையாகும்." என மனோகரன், துரை (1991:2) கூறுகிறார்.

படைப்பாளி அல்லது இலக்கிய கர்த்தாவுக்கும் இலக்கியத்தைச் சுவைப்போருக்கும் ஒரு பாலமாகவே திறனாய்வாளன் திகழ்கின்றான். இந்த சில நேரங்களில் இலக்கியக் கர்த்தாக்களைவிட திறனாய்வாளர்கள் தமது திறனாய்வுத் திறன் மூலம் புகழ் பெறுவதுண்டு. இந்தவகையில் பேராசிரியர் உவைஸ் அவர்களும், இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களைப் பல்வேறு கோணங்களில் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு அவற்றை இனங்கண்டு விமர்சன ரீதியாகவும் ஒப்பியல் ரீதியாகவும் ஆய்வுகளை மேற்கொண்டு இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்துக்கு புகழ் சேர்த்துள்ளார்.

இவரது இலக்கிய ஆய்வு முயற்சிகளை நோக்கும்போது, ஓர் இலக்கியத் திறனாய்வாளனுக்கு இன்றியமையாது காணப்படும் பரந்த மனப்பாங்கும் பழமையோடு சேர்ந்து புதுமையை வரவேற்கும் பண்பும், விசாலமான அறிவும், குறிப்பாகத் தமிழ் மட்டுமன்றி ஆங்கிலம், சிங்களம், அறபு, பாரசீக மொழி அறிவும், இவரிடம் ஒருங்கே அமைந்திருந்தன. மேலும், இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களில் ஆய்வினை மேற்கொண்டு இருந்தாலும், அவற்றை எத்தகைய சமயச் சார்பும் இன்றி, புறநிலையில் நின்று ஆய்வு செய்வதும் வரலாற்றுப் பின்னணியில் ஆய்வு செய்தபோது அவற்றைத் துணிகரமாக வெளியிடும் வெளிப்பாட்டு நோக்கும் பயனும் சுவையும் கருத்தாழமும் மிக்க சொல்லாட்சித் திறனும் அவரிடத்தில் ஆழ வேரூன்றிக் காணப்பட்டன.

இவர், இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தில் காணப்படும் அடிநாதக் கருத்து என்ன என்பதை முதலில் இனங்கண்டு கொள்வதோடு அவை இஸ்லாமியக் கோட்பாடுகளுக்கு அமைவாகக் கூறப்பட்டுள்ளனவா? என்பதைப் பார்க்க முற்பட்டுள்ளதைக் காணமுடியும். இதன் பின்பு, குறிப்பிட்ட உருவத்தில் அல்லது இலக்கிய வடிவத்தில் படைப்பு அமைவது நியாயந்தானா? என்பதை எடுத்துக் காட்ட முயற்சி செய்வதையும் அவரது இலக்கிய ஆய்வு முயற்சிகளில் காணக்கூடியதாக அமைந்துள்ளது.

திறனாய்வு செய்யும்போது, எல்லாவற்றையும் திறனாய்வு செய்ய வேண்டும் என்பதில்லை. ஒரு திறனாய்வாளன் ஆய்வு ரீதியாகப் பார்த்தால் இன்னொருவர் வரலாற்று ரீதியாகவும் பிறிதொருவர் சமூகக் கண்ணோட்டத்திலும் பார்க்க முற்படலாம். ஒரு படைப்பு தம்மை எப்படிக் கவர்கிறது என்பதைத் திறனாய்வாளர் பல்வேறு விதங்களில் விளக்குவார். மேலும், ஆய்வாளன் தன் திறனை வெளிப்படுத்துவதற்கு இலக்கியங்களுக்கு இடையில் ஒப்பு நோக்கியும் தம் திறனை வெளிப்படுத்துவர்.

> "இலக்கியங்களை ஒப்புநோக்கி ஆய்வு செய்பவர்களாக இருந்தவர்கள் பெரும்பாலும் சமயவாதிகளும் சமய நூல்களை ஆய்வு செய்தவர்களும் ஆவர். இவர்கள் தர்க்கம் முதலியவற்றில் மறுக்கப்பட வேண்டியவற்றை மறுத்து சமய

விடயங்களை நிறுவுதல் ஒப்பு நோக்கி ஆய்வு செய்வதன் மூலமாகத்தான் தொல்காப்பியர் மரபியலிலே தந்திர உத்திகளை விரித்துக் கூறும்போது ஒப்பக் கூறல், தன்கோட் கூறல், பிறனுடம்படுதல் என்பனவற்றைச் சமயம் சார்ந்த ஒப்பியல் வழிவந்த தர்க்கத்தில் எடுத்தாள்கின்றார். இவ்வாறு இலக்கண நூல்களை எழுதியவர்களும், சமய நூல்களை ஆய்வு செய்தவர்களும் தத்தம் தேவைகளுக்கு ஏற்ப ஒப்புநோக்கியுள்ளனர்." என்று கைலாசபதி (1991:2) கூறுகிறார்.

இந்தவகையில் பேராசிரியர் உவைஸ் அவர்களின் பெரும்பாலான ஆய்வுகள் இஸ்லாமிய சமய கோட்பாடுகளின் அடிப்படையில் அமைந்தமையால், இவர் பெரும்பாலும் ஒப்பியல் ஆய்வை மேற்கொண்டுள்ளார் எனலாம். இவர் இஸ்லாமிய சித்தர்களுக்கும் சைவ சித்தர்களுக்கும் இடையேயுள்ள ஒற்றுமைகளை அவருடைய ஒப்பியல் ஆய்வுத் திறன் மூலம் சிறப்பாக எடுத்துக் காட்டியுள்ளார்.

"சைவ சமய சித்தர்களைப்போல், தமிழ் நாட்டில் வாழ்ந்த இஸ்லாமியச் சித்தர்களும் பக்தி ததும்பும் மெய்ஞ்ஞானப் பாடல்களைப் பாடியுள்ளனர். அவர்களின் பக்தி ததும்பும் பாக்கள் தமிழ் இலக்கியத்தில் சிறப்பிடம் பெறுகின்றன. இஸ்லாமிய ஞானப்பாக்களுள் பெரும்பகுதியைப் பாடியவர்களுள் குணங்குடி மஸ்தான் சாஹிபு, காலங்குடி மச்சரேகைச் சித்தன், தக்கலை பீர்முகம்மது சாஹிபு ஆகிய மூவரும் முக்கியமானவர்கள்." என பேராசிரியர் உவைஸ் அவர்கள் (1976:25) கூறுகிறார்.

"சித்தர்கள் பல்வேறு சமயங்களைச் சேர்ந்திருந்தாலும் தத்தமது அனுபவங்களில் உச்ச நிலையை அடைந்தபொழுது, ஏறக்குறைய ஒரே பாணியில் பாடுவர். ஆனால், பல்வேறு சமயங்களைச் சார்ந்த வெவ்வேறு ஞானிகளின் பக்திப் பாடல்களில் அவரவர்களுக்குரிய சிறப்பியல்புகள் இல்லாமலில்லை. மஸ்தான் சாஹிபு பாடல்களில் பல இடங்களில் இந்து சமயக் கோட்பாடுகள் இடம்பெற்றுள்ளமைக்கான காரணம் அவர் வாழ்ந்த சூழலே என்று தில்லைநாதன், சி., (1967:59) சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனைக் கருத்திற்கொண்டு தாயுமான சுவாமிகளின் திருப்பாடலுக்கும் முஸ்லிம் ஞானிகளின் பாடல்களுக்கும் பல ஒற்றுமைகளை எடுத்துக் காட்டியுள்ளமையினை நோக்கும்போது உவைஸ் அவர்களுடைய ஒப்பியல் ஆய்வுத் திறனின் சிறப்பினை விளங்க முடியும்.

மஸ்தான் சாஹிபின் மெய்ஞ்ஞானப் பாடல்கள் பெரும்பாலானவற்றுள் இஸ்லாமியக் கோட்பாடுகளும் அறுபுச் சொற்களும் இடம்பெற்றுள்ளன. இருந்தாலும் சில இடங்களில் இந்து சமயக் கோட்பாடுகளும் இடம்பெற்றுள்ளன என்று கூறி அவற்றுக்கான ஆதாரங்களாக தாயுமான சுவாமிகளினதும் மஸ்தான் சாஹிபினதும் பாடல்களில் சிலவற்றைப் பின்வருமாறு எடுத்துக் காட்டுகின்றார்:

தாயுமான சுவாமிகள் தமது பராபரக் கண்ணியில்,

"எண்ணாத வெண்ண மெல்லா மெண்ணி யேழை நெஞ்சம்
புண்ணாகச் செய்ததினிப் போதும் பராபரமே"

என்று பாடியதுபோல் மஸ்தான் சாஹிபு அவர்களும் தமது நிராமயக் கண்ணியில்,

"எண்ணாத வெண்ண மெல்லா மெண்ணி யிடைந்து மனம்
புண்ணாவதற்கோ புகுந்தே நிராமயமே"

பாடியிருப்பதைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், மனித உடம்பை நீரிலே உண்டாகும் ஒரு நீர்க்குமிழிக்கு ஒப்பிட்டு மஸ்தான் சாஹிபு அவர்கள் நிராமயக் கண்ணியில்,

"நீராற்றிரள் குமிழி நேர்மை தருமிவ்வுடலம்
யாரார்க்குக்கை கொடுத்ததையா நிராமயமே"

இதே கருத்து தாயுமான சுவாமியின் பைங்கிளிக் கண்ணியில் இவ்வாறு இடம்பெற்றுள்ளது என எடுத்துக் காட்டுகிறார்:

"நீரிற் குமிழி போன்ற வுடலிற் கையிலே சாசுவதஞ்
சேர்க்க வறியாமற்றிகைப்பேனோ பைங்கிளியே"

சிவஞான சித்தியாரில் இந்துமதக் கிரியையாகக் குறிப்பிடப்படும் ஆத்ம சுத்தி, ஸ்தான சுத்தி, மந்திர சுத்தி, திரவிய சுத்தி, தேவ சுத்தி ஆகிய பஞ்ச சுத்திகளைப் பற்றியும் மஸ்தான் சாஹிபு தமது நிராமயக் கண்ணியில் கூறியுள்ளதாக உவைஸ் அவர்கள் (1961:109) குறிப்பிட்டுள்ளார்கள்.

காலங்குடி மச்சரேகைச் சித்தனின் பாடல்கள், காலங்குடி மச்சரேகைச் சித்தன் திருப்பாடல்கள் எனத் தொகுக்கப்பட்டுள்ளன. இவை சைவ சித்தாந்த முறைப்படி திருப்பாடல் பதிகங்கள் எனப் பெயரிடப்பட்டுள்ளன என்றும் சித்தர்களின் பாடல்களில் காணப்படும் ஆனந்தக் களிப்பும் இந்நூலில் இடம்பெற்றுள்ளதாகவும் எடுத்துக் காட்டியுள்ளார்.

இஸ்லாமிய சித்தர்களுள் ஒருவரான தக்கலை பீர்முஹம்மது சாஹிபுவின் ஞான மணிமாலையில் இஸ்லாத்தின் மூல மந்திரமான கலிமாவைப் பற்றிக் கூறும்போது உருவகங்களுடன் பாடியுள்ளார்:

"பெருமைக் குறியவனைப் பிறப்பென் றில்லானை
யருமைப் பெரியானென் றார்சொன்னார் – பெருமையுறுங்
காணநவ கோடிதரும் ஹக்காமெஞ் ஞானமறைப்
பேணியுள் ளத்தே பிடி"

இந்தப் பாடலை காளமேகப் புலவரால் பாடப்பட்ட

"ஆலங்குடியானை யாலால முண்டானை
ஆலங்குடியானென் றார்சொன்னார் - ஆலங்
குடியானே யாயிற் குவலயத்தோ ரெல்லாம்
மடியாரோ மண்மீதினிலே"

என்ற தனிப்பாடலுடன் ஒப்பிட்டுக் காட்டியுள்ளமை அவரது ஆழ்ந்த ஒப்பியல் திறனை வெளிப்படுத்துகிறது. (1961: 111 – 113)

மேலும், இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய 12 காப்பியங்களிலும் தண்டியலங்காரத்தில் கூறப்பட்டுள்ள காப்பிய இலக்கணங்கள் எவ்வாறு அவற்றில் எழுத்தாளப்பட்டுள்ளன என்பதை எடுத்துக்காட்டியுள்ளார். குறிப்பாக சீறாப்புராணம் காப்பிய இலக்கணங்கள் அனைத்தும் பெற்று பெருங்காப்பியமாகத் திகழ்கின்றது என்று தமிழ்க் காப்பியங்களோடு ஒப்பிட்டுள்ளார்.

சீறாப்புராணத்தின் விலாதத்துக் காண்டத்தில் இடம்பெற்றுள்ள நாட்டு நகர ஆற்று வர்ணனைகள் கம்பராமாயணத்தின் பால காண்டத்தைப் பெரிதும் ஒத்திருப்பதாகவும் இரண்டு காப்பியங்களிலும் சிற்சில சமயங்களில் ஒரே விதமான இயற்கை வர்ணனைகள் இடம்பெற்றிருப்பதையும் எடுத்துக் காட்டியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

கம்பர் ஓர் ஆற்றின் ஓட்டத்தை வர்ணிக்கும்போது அதனை ஒரு பரத்தைக்கு ஒப்பிடுகின்றார். அதாவது அரசனின் புயங்களைத் தழுவி அவனை மகிழ்வித்து, அவனிடமிருந்து பொருள்கள் அனைத்தையும் பரத்தைக் கவர்ந்து செல்வதுபோல், மலையிலே பிறந்து, பல வளங்களையும் கவர்ந்து ஆறு பாய்ந்து, ஓடுவதைப் பின்வரும் பாடலால் வர்ணிக்கின்றார்:

"தலையு மாகமுந் தாமுந் தழீஇயதன்
நிலைநி லாதிறை நின்றது போலவே
மலையிலுள்ள வெலாங் கொண்டு மண்டலால்
விலையின் மாதரை யொத்ததவ் வெள்ளமே" (கம்பராமாயணம் : நாட்டுப்படலம்)

இதே கருத்தை உமறுப் புலவரும் ஆற்றினை வர்ணிக்கும்போது இவ்வாறு பாடுவதாக எடுத்துக் காட்டுகிறார்:

"மலையெனுமரசன் புயங்களைத்தழுவி
மகிழ்ச்சி செய்தவனுழைச் சிறந்த
நிலைகெழு பொன்னு முரக செம்மணியும்
நித்தில ராசியுங் கவர்ந்து
தொலைவிலா பண்டமனைத்தையும் வாரிச்
சுருட்டியே யெல்லை விட்டகலும்
விலைமகள் போலப் பலபல முகமாய்
வெள்ளருவித் திரள் சாயும்" (சீறாப்புராணம் : நாட்டுப்படலம்)

இவ்வாறே ஏனைய இஸ்லாமியத் தமிழ்க் காப்பியங்களையும் ஒப்பிட்டு ஆய்வு செய்துள்ளார்.

தொன்னூற்று ஆறு வகைப் பிரபந்தங்களுள் பல இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்திலும் இடம்பெற்றுள்ளன. ஆற்றுப்படை, அம்மானை, அந்தாதி, கலம்பகம், கோவை, பிள்ளைத் தமிழ், மாலை, ஏசல், திருப்புகழ், கீர்த்தனை, சிந்து, கும்மி, தாலாட்டு, ஆனந்தக் களிப்பு போன்ற பிரபந்தங்கள் தமிழ் இலக்கிய மரபுக்கு அமையவும் அதேவேளை, இஸ்லாமியக் கோட்பாடுகளுக்கு உட்பட்டும் அமைந்துள்ளன என்பதையும் ஒப்பிட்டு ஆய்வு செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இசையோடு பாடக்கூடிய பிரபந்தங்களுள் ஒன்று திருப்புகழ். தமிழ் பெருவழக்கில் திருப்புகழ் என்றால் அது அருணகிரி நாதரால் முருகக் கடவுள் மீது பாடப்பட்ட திருப்புகழையே குறிக்கின்றது. இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய திருப்புகழ்களுள் காசிம் புலவருடைய திருப்புகழ் பிரசித்தி பெற்று வழங்குகின்றது. இந்தவகையில் இருவரின் திருப்புகழிலும் காணப்படும் ஒற்றுமைகளை எடுத்துக் காட்டுகின்றார். மேலும், இந்நூல்கள் பற்றிக் குறிப்பிடும்போது இரண்டு வெவ்வேறு சமயங்களைச் சேர்ந்த இரு புலவர்கள் கருத்தொருமித்து, ஒரே புலவர்களால் பாடப்பட்டதைப் போன்று இரண்டு திருப்புகழ் நூல்களும் இயற்றப்பட்டுள்ளன எனக் கூறுகிறார்.

இத்திருப்புகழ்களில் இடம்பெற்றுள்ள பாடல்களில் முதற் பிரிவில் காளையரை மயக்கும் விலைமகளிரின் இயல்புகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இரண்டாம் பிரிவில் முதற் பிரிவில் வர்ணிக்கப்பட்ட விலைமாதரின் வலைக்குள் சிக்காமல் காப்பாற்றி அருளுமாறு இரண்டு தலைவர்களும் தமது பாட்டுடைத் தலைவர்களை வேண்டுவதாக அமைந்துள்ளன என்பதை அக்குறிப்பிட்ட பாடல்கள் மூலம் இவ்வாறு ஒப்பு நோக்குகிறார்:

**காசிம் புலவரின் திருப்புகழில்:**

எங்கள்குரு தீபமதி மைக்கார
முந்தவரு தேவர்முது மைக்கார
என்றுமக லாதஇள மைக்கார புலவனாதி

எங்குமொரு வேதசமை யக்கார
செம்பொனுல காளுநில மைக்கார
எண்டிசைய ளாவுவிரு துக்கார மதீனாவாழ்

துங்கநபி மலர்கள்தலை மைக்கார
நம்புமடி யார்கஞ்சி தக்கார
துஞ்சுதலி லாதவிர தக்கார எழில்தூய

தும்மிமகு மூதின்உதை யக்கார
அஞ்சுபொழு தானதொழு கைக்கார
துன்றுகலை ஞானமுறை மைக்கார இறசூலே

அதே அமைப்பில் அமைந்த அருணகிரி நாதரின் பாடலை எடுத்துக் காட்டுகிறார்:

"இந்தபுரி காதன்முதன் மைக்கார
சம்பமம யூரதார கக்கார
என்றுமக ளாதவிள மைக்கார குருமாகுன்

இன்பஅனு போகசர சக்கார
வந்தஅசு ரேசர்கல கக்கார
எங்களுமை சேயென மைக்கார மிகுபாவின்

செந்தமிழ்ச் சொல் நாலுகவி தைக்கார
குன்றெறியும் வேலின்வலி மைக்கார
செஞ்சொலடி யார்களெளி மைக்கார எழில்மேவும்

திங்கள்முடி நாதர்சம மக்கார
மந்திரவும் தேசமகி மைக்கார
செந்திருநகர் வாழுமரு மைத்தோழா பெருமானே

தாம் விரும்பிய ஓசை நயத்தை ஒழுங்கான முறையில் ஒவ்வொரு அடியிலும் அமைக்க அலாதியான திறமை வேண்டும். ஓசை நயந் தரக்கூடிய சொற்களைத் தேர்ந்தெடுத்து எந்த இடத்தில் மெய்யெழுத்துக்கள் இடம்பெற வேண்டும் எந்த இடத்தில் உயிர் எழுத்துக்கள் இடம்பெற வேண்டும் எனத் தேர்ந்து சொற்களைத் தெரியும் ஆற்றல் இருத்தல் அவசியம் என்றும் கூறுகிறார்.

> "ஒப்பியல் ஆய்வை மேற்கொள்ளும்போது வெறும் பொழுதுபோக்காகச் செய்யமுடியாது. இது ஒரு முக்கியமான ஆய்வாகவே காணப்படுகின்றது. இந்த ஆய்வு முறையின் மூலமாக ஒரு நூலின் தனிப்பண்புகளைத் திடமாகக் கூறமுடியும். ஒற்றுமைக்கு மத்தியிலும் ஒரு நுண்ணிய வேறுபாடு காணப்படும். அவற்றினை ஆதாரமாகக் கொண்டு ஒரு நூலின் தனிச்சிறப்புக்களை அறிய முடியும். அதாவது இரு இலக்கியங்களை ஒப்பிடும் போது அவற்றின் பொதுப்பண்பு, சிறப்புப்பண்பு என்பவற்றைத் தெளிவாக அறிய முடியும்." என கைலாசபதி (1972:5) கூறுகிறார்.

இவ்வாறு, மெய்ஞானப்பாடல்கள், காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள் ஆகியவற்றில் ஒப்பியல் நோக்கில் ஒப்பியல் ஆய்வை மேற்கொண்டு இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்கள் தமிழ் இலக்கிய மரபுக்கு இயையவும் இஸ்லாமிய கோட்பாட்டின் அடிப்படையிலும் அமைந்துள்ளன என்பதை நிரூபித்துள்ளமையை நோக்கும்போது அவருடைய ஒப்பியல் ஆய்வுத் திறன் சிறப்பாக வெளிப்பட்டு நிற்கின்றது.

**பயன்பட்ட நூல்கள்:**


01. கைலாசபதி, க., (1972), ***"இலக்கியமும் திறனாய்வும்"***, யாழ்ப்பாணம், வரதர் வெளியீடு.

02. உவைஸ், எம்.எம்., (1961), ***"இஸ்லாமியத் தென்றல்"***, இலங்கை மணிக்குரல் பதிப்பகம்.

03. தில்லைநாதன், சி., (1967), ***"வள்ளுவன் முதல் பாரதிதாசன் வரை"***, சென்னை, தமிழ்ப்புத்தகாலயம்.

04. மனோகரன், துரை, (1991), ***"இலக்கியத் திறனாய்வு – சில அறிமுகக் குறிப்புக்கள்"***, வானவில் கண்டி.